ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ அடைக்கலப்பத்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# ॥ அடைக்கலப்பத்து ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡பத்தி முதலாம் அவற்றில்⋆ பதி எனக்குக் கூடாமல்⋆
எத்திசையும் உழன்றோடி⋆ இளைத்துவிழும் காகம் போல்⋆
முத்திதரு நகர் ஏழில்⋆ முக்கியமாம் கச்சி தனில்⋆
அத்திகிரி அருளாளர்க்கு⋆ அடைக்கலம் நான் புகுந்தேனே (1)

சடைமுடியன் சது முகன் என்று⋆ இவர் முதலாம் தரம் எல்லாம்⋆
அடைய வினைப் பயன் ஆகி⋆ அழிந்துவிடும் படி கண்டு⋆
கடி மலராள் பிரியாத⋆ கச்சி நகர் அத்திகிரி⋆
இடமுடைய அருளாளர்⋆ இணை அடிகள் அடைந்தேனே (2)

தந்திரங்கள் வேறின்றித்⋆ தமது வழி அழியாது⋆
மந்திரங்கள் தம்மாலும்⋆ மற்றும் உள்ள உரையாலும்⋆
அந்தரம் கண்டடி பணிவார்⋆ அனைவர்க்கும் அருள் புரியும்⋆
சிந்துர வெற்பிறையவனார்⋆ சீலம் அல்லதறியேனே (3)

காகம் இராக்கதன் மன்னர்⋆ காதலி கத்திரபந்து⋆
நாகம் அரன் அயன் முதலா⋆ நாகநகரார் தமக்கும்⋆
போகம் உயர் வீடு பெறப்⋆ பொன் அருள் செய்தமை கண்டு⋆
நாகமலை நாயகனார்⋆ நல்லடிப் போதடைந்தேனே (4)

உகக்கும் அவை உகந்து⋆ உகவா அனைத்தும் ஒழிந்து⋆ உறவு குணம்
மிகத் துணிவு பெற உணர்ந்து⋆ வியன் காவல் என வரித்து⋆
சகத்தில் ஒரு புகல் இல்லாத்⋆ தவம் அறியேன் மதிட்கச்சி⋆
நகர்க் கருணை நாதனை⋆ நல் அடைக்கலமாய் அடைந்தேனே (5)

www.prapatti.com

அளவுடையார் அடைந்தார்க்கும்⋆ அதன் உரையே கொண்டவர்க்கும்⋆
வளவுரை தந்தவன் அருளே⋆ மன்னிய மாதவத்தோர்க்கும்⋆
களவொழிவார் எமர் என்ன⋆ இசைந்தவர்க்கும் காவலராம்⋆
துளவ முடி அருள் வரதர்⋆ துவக்கில் எனை வைத்தேனே (6)

உமதடிகள் அடைகின்றேன் என்று⋆ ஒரு கால் உரைத்தவரை⋆
அமையும் இனி என்பவர் போல்⋆ அஞ்சல் எனக் கரம் வைத்து⋆
தமதனைத்தும் அவர் தமக்கு⋆ வழங்கியும் தாம் மிக விளங்கும்⋆
அமைவுடைய அருளாளர்⋆ அடி இணையை அடைந்தேனே (7)

திண்மை குறையாமைக்கும்⋆ நிறைகைக்கும் தீவினையால்⋆
உண்மை மறவாமைக்கும்⋆ உள மதியில் உகக்கைக்கும்⋆
தண்மை கழியாமைக்கும்⋆ தரிக்கைக்கும் தணிகைக்கும்⋆
வண்மையுடை அருளாளர்⋆ வாசகங்கள் மறவேனே (8)

சுருதி நினைவிவை அறியும்⋆ துணிவுடையார் தூ மொழிகள்⋆
பரிதி மதி ஆசிரியர்⋆ பாசுரம் சேர்ந்தருக்கணங்கள்⋆
கருதி ஒரு தெளிவாளால்⋆ கலக்கம் அறுத்தத்திகிரி⋆
பரிதி மதி நயனமுடைப்⋆ பரமன் அடி பணிந்தேனே (9)

‡திருமகளும் திருவடிவும்⋆ திருவருளும் தெள் அறிவும்⋆
அருமை இலாமையும் உறவும்⋆ அளப்பரிய அடி அரசும்⋆
கருமம் அழிப்பளிப்பமைப்பும்⋆ கலக்கம் இலா வகை நின்ற⋆
அருள் வரதர் நிலை இலக்கில்⋆ அம்பென நான் அமிழ்ந்தேனே (10)

‡ஆறு பயன் வேறில்லா⋆ அடியவர்கள் அனைவர்க்கும்⋆
ஆறும் அதன் பயனும் இவை⋆ ஒருகாலும் பலகாலும்⋆
ஆறு பயன் எனவே கண்டு⋆ அருளாளர் அடியிணை மேல்⋆
கூறிய நற்குண உரைகள்⋆ இவை பத்தும் கோதிலவே (11)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com